பிற்பகல் 12–20

3. அறிவிப்பு

'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் நிலையினை உருவாக்க, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பெற்றுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, இன்றைக்கு (8–1–2020) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பெற்றுள்ள, அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள ஆறு ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கைகளின் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன. இவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று காலை 10–00 மணிக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) எதிர்க்கிறாரா? முன்னரே சொல்வதில்லையா? (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.